## தகவல் அறியும் உரிமை ஆணைக் குழுவினைத் தொடர்புக் கொள்ளுதல்


அறை இலக்கம் 203 -204,

புலொக் 02,

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்,

பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07

தொலைப்பேசி இல : 011 2691625/ 011 2691007

மின்னஞ்சல் முகவரி : rti.commission16@gmail.com

பெக்ஸ் : 011 2691625



LET US WORK FOR SOCAIL CHANGE

**Institute of Social Development**

**சமூக அபிவிருத்தி நிறுவகம்**

37, Bodiyangana Mw, Kandy

mohanraj@isdkandy.org

081 22 17 223

www.isdkandy.org


# தகவல் அறியும் உரிமைச் சட்டம்

# RIGHT TO INFORMATION

## 1. தகவல் அறியும் உரிமை என்றால் என்ன?

தகவல் அறியும் உரிமை என்பது அரச நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ள தகவல்களை பிரஜைகள் பெற்றுக் கொள்வதற்குள்ள உரிமையாகும். அரசாங்கத்தினை உருவாக்குதல் மாற்றுதல் என்பன பிரஜைகள் கொண்டுள்ள மிக உயர்ந்த அதிகாரத்தின் அடிப்படையிலேயே இடம்பெறுகின்றன என்பதனை நாம் எப்போதும் நினைவில் கொள்வது அவசியமாகும். அந்த




வகையில், அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக பிரஜைகள் அறிவுறுத்தப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

## 2. இலங்கைப் பிரஜைகளுக்கு தகவல் அறியும் உரிமை வழங்கப்பட்டுள்ளதா? ஆம்

- இலங்கையின் தற்போதைய அரசியல் அமைப்பின் 14வது உறுப்புரையில் தகவல் அறியும் உரிமை உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

- நீண்டப் போராட்டத்திற்கு பின்னர் 2016ஆம் ஆண்டு ஜீன் மாதம் 23ஆம் திகதி கொண்டுவரப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரஜைகளின் தகவல் உரிமைக்கு உயிர் கொடுத்தது. இச்சட்டம் அரசியல் அமைப்பில் உத்தரவாதப் படுத்தப்பட்டுள்ள தகவலுக்கான உரிமையினை அனுபவிப்பதற்கான வாய்ப்பினை வழங்கியுள்ளது. இதற்கு மிக முக்கியமான காரணம் இலங்கையின் அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட 19வது அரசியல் அமைப்பு சீர்திருத்தமாகும்.



## 3. தகவல் அறியும் சட்டத்தை யார் பயன்படுத்த முடியும்?

இலங்கைப் பிரஜை ஒவ்வொருவருக்கும் தகவல் அறியும் உரிமையுண்டு. ஆகவே, இச்சட்டத்தினை பயன்படுத்தி தனிப்பட்ட மற்றும் பொதுநலனுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றிய தகவல்களை சம்மந்தப்பட்ட அரச நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.




## 4. தகவல் அறியும் சட்டத்தின் நோக்கங்கள் என்ன?

- அரசாங்கத்தின் செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மை, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதன் மூலம் நாட்டில் ஊழலற்ற நல்லாட்சியினை ஏற்படுத்தல்.
- பொதுமக்கள் மீது பாதிப்பினை ஏற்புத்தக்கூடிய அரச பொது நிறுவனங்களின் தீர்மானங்களை, கொள்கைகளை அறிந்துக்கொள்ள வாய்ப்பினை வழங்குதல்.
- ஆட்சிமுறை செயற்பாடுகளில் மக்கள் பங்கேற்புக்கு பரந்த வாய்ப்பினை வழங்குதல்.



## 5. ஒரு பிரசை எந்த தகவலை பெற முடியும்?

- அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பான தகவல்கள்
- பொதுச் சேவைகள் தொடர்பான தகவல்கள் (கல்வி, சுகாதாரம், விவசாயம், குடிநீர், பாதைகள்)
- அரச நிறுவனங்களின் கொள்முதல் மற்றும் மானியங்கள் தொடர்பான தகவல்கள்
- அரசாங்கத்தின், அரச நிறுவனங்களின், பாராளுமன்றம், மாகாண, பிரதேச சபைகளின், அமைச்சுக்களின் வரவுகள், செலவுகள் மற்றும் நிதி தொடர்பான தகவல்கள்




## 6. உங்கள் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி திட்டங்களுக்கு எவ்வளவு பணம் செலவிடப்பட்டது? எவ்வாறான பொருட்களை கொண்டு நிர்மாணிக்கப்பட்டது? போன்ற தகவல்களை அறிந்துக்கொள்ள உங்களுக்கு உரிமையுண்டா?

ஆம். பிரஜை என்ற ரீதியில் உங்களுக்கு அவ்வாறான தகவல்களை அறிந்துக்கொள்ள உரிமையுண்டு. விண்ணப்பம் ஒன்றில் மேற்குறிப்பிட்ட தகவல்களை அறியத்தரும்படி தகவல் அதிகாரியிடம் முறையிடலாம். தகவல் அதிகாரி குறிப்பிட்ட திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி, செலவழிக்கப்பட்ட விதம் மற்றும் நிர்மாணத்திற்கு பயன்படுத்திய பொருட்கள் பற்றிய தகவல்களை வழங்க கடமைப்பட்டுள்ளார்.



## 7. இச்சட்டம் யாரை கட்டுப்படுத்தும்?

அரச நிறுவனங்களையும் (பிரதேச செயலகம், மாவட்ட செயலகம், பிரதேசசபை, மாகாண சபை, பாராளுமன்றம், அமைச்சர்கள், கிராம சேவகர்) அதிகாரிகளையும் அவர்களின் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தும். அவர்கள் தமது செயற்பாடுகளுக்கு பொதுமக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும்.




## 8. ஏன் தகவல் அறியும் உரிமை முக்கியமானது?

அரசாங்கத்துக்கு நாளாந்தம் வரி செலுத்தும் உங்களுக்கு அதன் செயற்பாடுகள் தொடர்பாக அறிந்துக்கொள்ள உரிமையுண்டு. மறுபுறம், பொதுமக்களுக்கு அவசியமான தகவல்களை வழங்குவது அரசாங்கத்தின் கடமையாகும்.

உங்களின் பெறுமதியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் என்ன செய்கின்றது (நிதி தொடர்பான விடயங்கள்) என்பது தொடர்பாக அறிந்திருப்பது உங்களின் உரிமையும் கடமையுமாகும்.



## 9. யாரிடமிருந்து தகவலைப் பெற முடியும்?

- அரசாங்க நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெற முடியும். உதாரணமாக, உங்கள் பிள்ளையின் பாடசாலை அனுமதி மறுக்கப்பட்டால் குறிப்பிட்ட பாடசாலையில் அல்லது கல்வித் திணைக்களத்தில் தகவலைப் பெற முடியும்.
- உங்களின் சமூர்த்தி விண்ணப்பம் மறுக்கப்பட்டால் பிரதேச செயலகத்தில் தகவல் பெற முடியும்.
- உங்களின் பிரதேசத்தில் சட்டத்திற்கு புறம்பாக மரம் வெட்டப்பட்டால், மணல் அகழப்பட்டால் அல்லது கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டால் பிரதேச செயலகத்தில் அது தொடர்பான தகவலை பெற முடியும்.
- உங்கள் பிரச்சினையுடன் தொடர்புடைய அரசாங்க நிறுவனத்தை அடையாளம் கண்டு அதன் பின்னர் தகவல் கோரிக்கையினை முன்வையுங்கள்.




## 10. தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து தகவலைப் பெற முடியுமா? ஆம்



இலங்கை அரசின், அரச நிறுவனங்களின் மற்றும் பகிரங்க கூட்டுத்தாபனங்களிடமிருந்து 25 வீதத்திற்கு மேற்பட்ட நிதியை அல்லது பங்குகளைப் பெற்று செயற்படும் தனியார் கம்பனிகள் அல்லது நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெற முடியும்.

## 11. தகவல் அலுவலர் என்பவர் யார்?


அரசப் பொது நிறுவனங்களில் இச்சட்டத்தின் பிரகாரம் பிரஜைகளுக்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்கு நியமிக்கப்படுகின்ற அதிகாரிகள் தகவல் அலுவலர் என அழைக்கப்படுகின்றனர். ஒவ்வொரு பொது அதிகாரசபைகளிலும் ஒரு தகவல் அதிகாரி அல்லது தேவைப்படின் ஒன்றுக்கு மேற்பட்ட தகவல் அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்.

## 12. தகவல் அலுவலர் பற்றிய விபரங்களை எவ்வாறு தெரிந்துக்கொள்வது?

பொது அதிகார சபையின் வளாகத்தில் அல்லது அறிவிப்பு பலகையில் மக்கள் பார்க்க கூடிய பொது இடங்களில் தகவல் அலுவலரைத் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

## 13. தகவல் வழங்குவதற்கு பிரத்தியேக நிறுவனம் உண்டா?

இல்லை. அவ்வாறான நிறுவனம் இன்னும் தாபிக்கப்படவில்லை. நீங்கள் சம்மந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களிடமிருந்து உங்களுக்கு அவசியமான தகவல்களைப் பெற முடியும்.



## 14. தகவல் கோரிக்கை வழங்கப்பட்ட பின்னர் என்ன நடக்கும்? தகவலைப் பெற எவ்வளவு காலம் எடுக்கும்?

தகவல் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கை கிடைக்கப் பெற்றவுடன் முடியுமானளவு விரைவில் தகவல் வழங்க முடியுமா அல்லது இயலாதா என்ற தீர்மானத்தினை தகவல் அலுவலர் எடுக்க வேண்டும். அது தொடர்பான முடிவினை விண்ணப்பதாரருக்கு 14 நாட்களுக்குள் அறிவிக்க வேண்டும். இக்காலத்தினை 21 நாட்கள் வரை நீடிக்கலாம்.



## 16. தகவல் அறியும் கோரிக்கை விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க எவ்வளவு பணம் செலவாகும்? இல்லை.

ஒரு ரூபாவையேனும் நீங்கள் செலவிட வேண்டிய தேவையில்லை. குறிப்பாக, நீங்கள் கோரிய தகவல் நான்கு தாள்களுக்கு மேலதிகமாக காணப்பட்டால் மாத்திரமே பணம் அறவிடப்படும்.

நான்கு தாள்களுக்கு மேலதிகமாக இருப்பின், உங்களிடமிருந்து பணத்தை அறவிட அதிகாரிக்கு உரிமையுண்டு. அதற்கான ரசீது வழங்கப்படல் வேண்டும்.




## 18. தகவல் ஆணைக்குழு என்றால் என்ன?

தகவலறியும் சட்டத்திற்கமைய தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழு இதுவாகும். 5 உறுப்பினர்கள் இவ்வாணைக்குழுவில் உள்ளடங்குவர். இச்சட்டத்தின் அமுலாக்கத்தினை கண்காணித்தல், தகவல் கோரிக்கை மறுக்கப்பட்டால் அது தொடர்பான விசாரணைக்காக ஆணைக்குழு முன் தோன்றுமாறு நபர்களை பணித்தல் மற்றும் விசாரணைகளை மேற்கொள்ளல் போன்ற முக்கிய கடமைகளை மேற்கொள்கின்றது.




## 15. உங்களின் தகவல் அறியும் உரிமை மீறப்பட்டால் என்ன செய்வது?

உங்களின் தகவல் கோரிக்கை ஏதேனும் காரணத்தினால் நிராகரிக்கப்பட்டிருப்பின் அது தொடர்பான மேன்முறையீட்டினை தகுந்த ஆதாரங்களுடன் தகவல் ஒரு மாதத்துக்குள் தகவல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க முடியும்.




## 17. இச்சட்டத்தினை மீறுபவர்களுக்கு தண்டனைகள் உண்டா?

ஆம். அரச அதிகாரிகள் இச்சட்டத்தினை மீறியமை நீதிமன்ற தீர்ப்புக்கமைய உறுதிப்படுத்தப்படுமாயின், பின்வரும் தண்டனைகளில் ஒன்றை அனுபவிக்க நேரிடும்.

a) 50000 ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணம்

b) இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத்தண்டனை

c) 50000 ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணம் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத்தண்டனை

